தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1974 சனவரி 30

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Institute of Management.

* 241 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the State Planning Commission has recommended to the Government to set up an Institute of Management; and

(*b*) if so, the details there of?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) திட்ட ஆணைக்குழுவுடனும் பிற வல்லுநர்களுடனும் கலந்தாலோசித்து விவரங்கள் அரசால் இறுதியாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, பொதுத் துறை வளர்ந்து வரும் இந்நாளில் நிர்வாகத் திறன் படைத்தவர்கள் தேவை அதிகரிக்கும் காரணத்தால் மிக விரைவில் இன்ஸ்டிட்யூட் ஆப் மானேஜ்மென்டைத் துவக்குவதற்கான வழிவகை செய்யப்படுமா? ஏற்கெனவே தனியார்த் துறையில் 'மானேஜ்மென்ட்' கோர்ஸ் கோவையில் பி.எஸ்.ஜி. இன்ஸ்டிட்யூட் போன்ற இடங்களில் இருக்கிறது. இன்ஸ்டிட்யூட் ஆப் மானேஜ்மென்ட் துவக்கப்படுவதற்கிடையில் இத்தகைய இடங்களில் நடக்கும் மானேஜ்மென்ட் கோர்ஸில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் முயற்சி கையாளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதனுடைய தேவையை உணர்ந்துதான் மாநில அளவில் இதைத் தொடங்கவேண்டுமென்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. ஏற்கெனவே இந்தியாவில் கல்கத்தா, அகமதாபாத், பங்களூர் ஆகிய இடங்களில் இந்த அமைப்புகள் உருவாகி, நிர்வாகக் கல்விப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தென்னாட்டைப் பொறுத்த வரையில், பங்களூரில் மத்திய அரசு உதவியுடன் நிறுவப்பட்டுவிட்டது. நம் மாநில அளவில் மத்திய அரசு உதவியைப் பிறகு எதிர்பார்த்துப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு மாநில அளவில் இதைத் தொடங்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையொட்டி, நிர்வாகத்திறனின் அவசியத்தை உணர்ந்துதான் இதை நாம் இப்பொழுது செய்திருக்கிறோம். தனியார்த்துறையில் இருக்கின்ற நிலைமைகளையும் ஆராய்ந்து, ஏற்ற முடிவுகளை அரசு எடுப்பதுபற்றி பரிசீலிக்கும்.

DR. H. V. HANDE : May I know the number of students who are going to be admitted annually? What is the extra expenditure for the Government ? May I know whether it is possible for the Government to select persons who are working in companies, in this institution, so that they may be working and at the same time receive training?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த விவரங்களைப்பற்றியெல்லாம் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. ஆனால், இதை அமைப்பதற்கான மூலதனச் செலவு—கட்டடம், மேசை, நாற்காலி போன்றவை எல்லாம் சேர்த்து 187 லட்ச ரூபாய் ஆகும் என்றும், துவக்க ஆண்டில் இதற்கான தொடர் செலவு ரூபாய் 8,80,000 ஆகும் என்றும், நிறுவனம் முழுமைபெற்ற பிறகு தொடர் ஆண்டுச் செலவு 36 லட்ச ரூபாய் ஆகும் என்றும் இப்பொழுது மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இந்த நிருவாகப் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்குப் போதுமான நிதி வசதி தற்போது இல்லையென்றால், 'சம்மர் இன்ஸ்டிட்யுட் ஆப் மானேஜ்மென்ட்'—கோடை காலத்தில் நிர்வாகப் பயிற்சி அளிப்பதற்கான நிலையத்தையாவது உடனடியாகத் துவக்குவதற்கு அரசு யோசனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்பொழுது நிதி வசதி இல்லையென்றால் அப்படிச் செய்யப்படுமா என்ற கேள்விக்கே இடமில்லை. இதற்கான ஆரம்ப வேலைகள்தான் இப்பொழுது நடந்துகொண்டு இருக்கின்றன.

1974 சனவரி 30]

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த இன்ஸ்டிட்யூட் எப்பொழுது தொடங்கப்படும்? எந்த இடத்திலே தொடங்கப்படும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் ஆரம்பத்தில் சொன்னதைப் போல், மத்திய அரசு அளவில் நிறுவுவதாக இருந்தால் எந்த இடத்தில் தொடங்கப்படும் என்கின்ற கவலை நமக்குத் தேவை. ஆனால், தமிழ்நாடு அரசின் சார்பாக இதை நாம் அமைக்கின்ற காரணத்தால், குறிப்பாக சென்னை இதிலே முதல் இடமாக எடுத்துக்கொள்ளப்படலாம். எப்பொழுது தொடங்கப்படும் என்பதற்கு, மூலக் கேள்விக்கு அளித்த பதிலில், விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தேன். இறுதி மதிப்பீடு முதலிய விவரங்களெல்லாம் விரைவில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதற்குப் பிறகு தேதி அறிவிக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். கால அளவு, ஏனைய விவரங்கள் அனைத்தும் அரசால் இறுதியாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று சொல்லியிருக்கிறேன். அந்த விவரங்கள் வந்த பிறகுதான் அதைப்பற்றிய விளக்கங்களை நான் அளிக்க முடியும்.

Public Service Commission Bulletin.

*242 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Public Service Commission has been permitted to issue any bulletins; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம் .

(இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவின் வெளியீடு, இரு வார (fortnightly) வெளியீடாக இருக்கும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவின் செயலாளர், அதன் ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும் இருப்பார். ஆணைக்குழுவால் பணிக்கு ஆட்சேர்ப்பு குறித்த அறிவிப்புக்களும், அதனால் நடத்தப்படும் தேர்வுகள் அனைத்தின்